## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட எயார்போர்ட் என்ட் எவியேஷன் சேர்விசஸ் (சிறீ லங்கா) (பிரைவேட்) கம்பனியின் ''கம்பனி'' 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

----------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய அசையக்கூடிய மற்றும் அசையமுடியாத சொத்துக்களை பெறுமதியிட்டு கணக்குகளில் பதியாமலும் தேறிய சொத்து மாற்றத்திற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை வழங்காமலும், 2006 பெப்ரவரி 09 ஆம் திகதிய | அரசாங்க விலைமதிப்பீட்டு திணைக்களம் ஊடாக அனைத்து பீஐஏ இன் கட்டிடங்களும் பெறுமதியிடப்பட்டுள்ளன. அத்தகைய பெறுமதி கணிப்பீடு பூர்த்தி செய்யப்படுதல் மீது அனைத்து அசையா ஆதனங்களும் சட்டரீதியான உரிமைத்துவம் தெளிவுபடுத்தப்பட்டு கணக்குகளிற்கு எடுக்கப்படும். அத்துடன் அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு தேறிய சொத்துக்கள் மீது திறைசேரிக்கு | சாத்தியமானளவு விரைவாக மீள்மதிப்பீட்டு செயன்முறையை பூர்த்தி செய்வதற்கும் திறைசேரி செயலாளரால் பணிப்புரை வழங்கப்பட்டவாறு தேறிய சொத்துக்கள் மீது இலங்கை அரசாங்கத்திற்கு பங்குகளை |

| | | |
|---|---|---|
| பிஈ/ஜீஓசீஓ/1/1 ஆம் இலக்க திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதத்தின் பணிப்புரைக்கு முரணாக கம்பனியானது பொறுப்புக்களை மாத்திரமே பொறுப்பேற்றிருந்தது. | பங்குகளை வழங்கும் சாத்தியத்தன்மை ஆய்வு செய்யப்படும். மேலும், 2010 இன் 14 ஆம் இலக்க விமான சேவைகள் அதிகாரச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட சட்டரீதியான சேவை வழங்குநராக, அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை பயன்படுத்துவதற்காக சிவில் வாமன சேவைகள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்குவதற்கும் பரிந்துரை செய்யப்படுகின்றது. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காதமை தொடர்பான அனைத்து விடயங்களும் இத்தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் கம்பனியால் விமான நிலையமொன்றை உருவாக்கும் அல்லது வியாபித்தல் தொடர்பான பிரதான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. | எம்ஆர்ஜஏ வின் பிரதான திட்டம் இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பீஜஏ வசம் 1983 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட பிரதான திட்டமொன்று உள்ளது. ஏஏஎஸ்எல் இனால் பீஜஏ இற்காக பிரதான திட்டக் கற்கையொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதுடன், நாளதுவரையாக்கப்பட்டு ள்ளது. பிரதான திட்டம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பெற்றுக்கொள்ளக்கூடிய தாக இருக்கும். | பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டிகள் தொடர்பான 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 9.2(ஈ) பந்தி | கம்பனியின் அமைப்பு வரைபடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபை பதவியணியை அங்கீகரித்திருந்ததுடன், ஏஏஎஸ்எல் இனால் 2021 சனவரி 21 ஆந் திகதி அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. | பொதுத் திறைசேரியிடமிருந்து அமைப்பு வரைபடத்திற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 9.3.1(i) ஆம் பந்தி | கம்பனியின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) பொதுத் திறைசேரியின் ஒருமைப்பாட்டுடன் உரிய அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 யூன் 11 ஆந் திகதி SORP இனை மீளாய்வு செய்வதற்காக கம்பனியால் SORP குழுவொன்று நியமிக்கப்பட்டது. SORP இந்காக ஊழியர்களின் குறைகளை மதிப்பாய்வ செய்வதற்கு குழு தீர்மானித்துள்ளது. SORPS மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் குழுவினால் SORP களை MSD மாதிரிக்கு மாற்றும் நடைமுறை நிறைவு செய்யப்படும். | பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தை தயாரித்து பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 9.14 ஆம் பந்தி | பொதுத் திறைசேரியின் ஒருமைப்பாட்டுடன் மனிதவள முகாமைத்துவ (HRM) நடைமுறை கைநூல் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவக் கொள்கை கைநூலின் இறுதி வரைபு மேலதிக மீளாய்வுகளுக்காக PWC மதியுரையாளரினால் ஏஏஎஸ்எல் இற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பது தொடர்பில், குறித்த மனிதவள முகாமையாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. எவ்வாறான போதிலும், கொவிட் - 19 | மனிதவள முகாமைத்துவக் கொள்கை கைநூல் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன், வரிசை அமைச்சின் ஊடாக திறைசேரியின் செயலாளரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

தொற்றுநோய் நிலைமை காரணமாக, மதியுரையாளர்களுடனான கலந்துரையாடல்களை உரிய கால அட்டவணைக்கமைய மேற்கொள்ள முடியாதிருந்தது.

## 1.7 தகவல் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 மே 31 ஆந் திகதி வரையிலும் தற்போதைய தொழில்நுட்பத்திற்கு பொருத்தமான ERP கட்டமைப்பொன்று கம்பனிக்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. மேலும், கம்பனியின் நிதி முறைமை 1984 இல் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் காலாவதியான நிகழ்ச்சித்திட்ட மொழியான COBOL முறைமையை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்துநர்களால் வேண்டப்பட்ட தொடர்ச்சியான மாற்றியமைத்தல்கள் காரணமாக நிதி முறைமையில் பயன்படுத்தப்பட்ட இத் தொகுதிகை (modules) தொடர்வதில் உயர் ஆபத்து இனங்காணப்படுகின்றதுடன் தொகுதிகள் மற்றும் ஏனைய தொடர்புபட்ட முறைமைகளிற்கிடையே ஒருங்கிணைப்பு காணப்படவில்லை. | தற்போதைய முறைமையின் மட்டுப்படுத்தல்கள் இச் சிக்கலிற்கான காரணமாகும். இது இனங்காணப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவம் புதிய முறைமையொன்றின் பெறுகையை ஆரம்பித்திருந்தது. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் செயற்திட்ட கால அட்டவணையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. 2021 மே மாதம் தலைவரால் வழங்கப்பட்டுள்ள தற்போதைய அங்கீகாரத்தின் பிரகாரம் ERP கட்டமைப்பு 2021 யூலை 1 ஆந் திகதி நேரடியாக பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. | கம்பனியின் தேவையை நிறைவேற்றுவதற்காக கூடிய விரைவில் புதிய ERP முறைமையை அமுல்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 2,504,429,627 ஆன நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 10,996,009,352 ஆகும். அதன் காரணமாக, ரூபா 13,500,438,979 ஆன வீழ்ச்சியொன்று நிதி விளைவுகளில் அவதானிக்கப்பட்டது. கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக வருமானம் ரூபா 18,076,392,839 இனால் அல்லது 70 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 முக்கிய வருமான செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| வருமானம் | 2020<br>(ரூபா) | 2019<br>(ரூபா) | வேறுபாடு<br>(ரூபா) | % |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| - விமான (Aeronautical) வருமானம் | 2,290,647,423 | 5,430,766,464 | **(3,140,119,041)** | **(58)** |
| - விமானமற்ற (Non Aeronautical) வருமானம் | 5,285,212,945 | 20,221,486,743 | **(14,936,273,798)** | **(74)** |
| ஏனைய வருமானம் | 212,551,351 | 40,988,731 | **171,562,620** | **419** |
| நிதி வருமானம் | 3,665,084,724 | 4,164,672,412 | **(499,587,688)** | **(12)** |
| **நிர்வாக மற்றும் தாபன செலவினங்கள்** | | | | |
| பதவியணியினர் கிரயம் | 5,770,201,664 | 6,513,810,228 | **(743,608,564)** | **(11)** |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 265,898,453 | 462,842,807 | **(196,944,354)** | **(43)** |
| கடன்பட்டோர் நட்டக்கழிவிற்கான ஏற்பாடு | 643,481,376 | 397,143,394 | **246,337,982** | **62** |
| **நிதிக்கிரயம்** | | | | |
| செலாவணி (இலாபம்)/ நட்டம் (கடன் மீதான) | 2,268,147,704 | (156,729,149) | **2,424,876,853** | **1547** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 2019 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட செலாவணி நட்டத்திற்கு ஒப்பாக 2020 ஆம் ஆண்டின் போது பரிவர்த்தனைகள் மீதான தேறிய செலாவணி இலாபம் அதிகரித்தமையானது, ஏனைய வருமானங்கள் 419 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

| விகிதத்தின் வகை | 2020 | 2019 | 2018 | 2017 | 2016 |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 7.68 | 7.23 | 3.49 | 2.78 | 2.64 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 7.55 | 7.10 | 3.43 | 2.71 | 2.60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேறிய இலாப/(நட்ட) விகிதம் (%) | (32) | 43 | 18 | 42 | 38 |
| பங்கொன்றிற்கான உழைப்பு (ரூபா) | (12,522) | 54,979 | 26,566 | 43,574 | 34,598 |
| தேறிய சொத்துக்கள் மீதான திரும்பல் (%) | (7) | 28 | 19 | 37 | 42 |
| பிரயாணி ஒருவரிற்கான வருமானம் (ரூபா) | 3,279 | 2,580 | 2,640 | 2,085 | 1,936 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெற வேண்டிய வருமான வரி ரூபா 833 மில்லியனால் அதிகரித்தமை நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் அதிகரிப்பதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

(ஆ) கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக மீளாய்வாண்டுக்காக பிரதானமாக ஏற்பட்ட நட்டம் காரணமாக ஆண்டுக்கான பங்கொன்றுக்கான உழைப்பு 123 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கம்பனியின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளின் (KPI's) பௌதீக செயலாற்றல் கீழே தரப்பட்டுள்ளன.

| **முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்** | **2020** | **2019** | **2018** | **2017** | **2016** |
|---|---|---|---|---|---|
| சர்வதேச விமான அசைவுகளின் எண்ணிக்கை | 20,881 | 62,195 | 67,351 | 62,850 | 61,637 |
| மொத்தப் பயணிகள் அசைவின் எண்ணிக்கை | 2,375,056 | 9,958,688 | 10,884,028 | 9,957,502 | 9,466,248 |
| சரக்கு அசைவுகள் (மெற்றிக் தொண்) | 150,075 | 259,089 | 279,559 | 274,044 | 248,348 |
| கையாளப்பட்ட விமானம் ஒன்றிற்கான மொத்தக் கிரயம் (ரூபா '000) | 727 | 235 | 318 | 202 | 216 |

கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக விமான சேவைகள் துறைக்கு ஏற்பட்ட பாரதூரமான தாக்கம் காரணமாக முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டினுள் அனைத்து முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI's) மீதான செயலாற்றல் வீழ்ச்சியடைந்திருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் போது முதற் கட்டமாக ரூபா 218 மில்லியன் மொத்தக் கிரயமான யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கையொன்று அல்லது சுற்றாடல் கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மேலும், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையமானது 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 46.5 மில்லியன் மற்றும் ரூபா 61.1 மில்லியனான செயற்பாட்டு நட்டத்தினைப் பதிவு செய்திருந்தது. | இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்குறிய தேவைப்பாடு ஏஎஸ்எல் இனால் எழுப்பப்பட்ட போதிலும், வழங்கப்பட்ட குறுகிய காலத்தினுள் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவி ல்லை. | செயற்திட்டத்தின் நிலைபேறான தன்மையை சான்றுபடுத்துவதற்காக எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கையொன்று அல்லது சுற்றாடல் கற்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சொத்துக்கள் குறியீடு இடுதல் முறைமை மற்றும் முறையாக நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எம்ஆர்ஜஏ நிலையான சொத்துக்கள் பதிவேடு அனைத்து அசையும் சொத்துகளுக்குமான புதிய 16 இலக்கு குறியீட்டு முறைமையுடன் வாசிக்கக்கூடிய சொத்துக்கள் குறியீட்டு முறையுடன் நாளதுவரையாக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>பீஜஏ நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தற்போது நடைமுறைப்படுத்தப்படும் புதிய ஈஆர்பீ செயற்திட்டத்திற்கு உட்படுத்துவதற்கு புதிய குறியீடுகள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு தகவல்களுடன் நாளதுவரையாக்கப்பட்டவாறு உள்ளது. | நாளதுவரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடொன்று கம்பனியால் பேணப்பட வேண்டியமை. |

**3.4 குறைவாக பயன்படுத்தப்பட்ட நிதிகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2012 மார்ச் 28 மற்றும் 2016 மார்ச் 24 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக நிலை II கட்டம் 02 இற்காக ஜப்பானிய யென் 74,397 மில்லியன் நிதியளிப்பிற்காக ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையுடன் இரண்டு உடன்படிக்கைகளை கம்பனி கைச்சாத்திட்டிருந்தது. எனினும் நிதியளிப்பு பெறுமதியில் 82 சதவீதத்திற்கு சமமான ஒப்பந்தப் பெறுமதி 2020 மார்ச் 04 வரையிலும் நீண்ட காலதாமதத்தின் பின்னரும் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 ஏப்ரல் 20 முதல் 2021 ஏப்ரல் 20 வரையிலும் ஜப்பான் சர்வதேச முகவராண்மைக்கு கம்பனியால் ரூபா 328 மில்லியனான தொகை நிதியினை குறைவாக பயன்படுத்தியமையால் உறுதிக் கட்டணமாக செலுத்தியுள்ளது. புதிய முனையக் கட்டிடத்தின் கூரையின் திட்டத்தினை மாற்றியமைத்தமையால் செயற்திட்டம் தாமதமடைந்தமைக்கு காரணமா அமைந்தது. | ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட பொதியின் பெறுமதி ஜ.யென் 41,554 மில்லியன் + இலங்கை ரூபா 35,136 மில்லியன் = ஜ.யென் 60,764 மில்லியன் (2021.2.12 இல் உள்ளவாறான நாணய மாற்று விகிதம் இலங்கை ரூபா 1 = ஜ.யென் 1.829) நிதியத்தின் பெறுமதியில் 81.68 சதவீதத்திற்கு சமனான ஒப்பந்தப் பெறுமதி 2020 மார்ச் 4 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதிலும், கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக ஒப்பந்ததாரரின் வெளிநாட்டுப் பதவியணியை ஒழுங்கமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக காலதாமதமொன்று ஏற்பட்டிருந்ததுடன், இறுதியில் 2020 திசெம்பர் 15 ஆந் திகதி பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், 2021 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் திட்டமிடப்பட்ட 0.03 சதவீதத்திற்கு ஒப்பாக 0.06 சதவீதமாகும். 2021 ஏப்ரல் 20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள உறுதிக் கட்டணங்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட கடன் இலக்கம் 104 இடமிருந்து ஜ.யென் 235 மில்லியன் ஆகும். மேலும், கம்பனியால் 2016 மார்ச் 24 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட SLP-114 ஆம் இலக்க கடனுக்காக இறுதிக் கட்டணமாக ஜ.யென் 90.86 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலைப்பொதியின் நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிக தாமதங்களை தவிர்ப்பதற்கு காலரீதியாக நிர்மாண செயன்முன்னேற்றம் மிளாய்வு செய்யப்பட வேண்டும். |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பட்டியலிடப்பட்ட காலத்தினுள் பெரும்பாலான பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பெறுகையில் அதிகளவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டது. | அவசியமற்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | பெறுகை நடவடிக்கைகள் கால வரையறையினுள் நிறைவேற்றப்பட வேண்டியதுடன் தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நிலைபேறான இலக்குகள் இனங்காணப்பட்டு கம்பனியின் கூட்டிணைந்த திட்டம்/ வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்படவில்லை. | ஏனைய தொடர்புபட்ட நிறுவனங்களின் முன்கூட்டிய ஒருங்கிணைப்புடன் கம்பனியால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட வேண்டும். |